# அமெரிக்கன் கல்லூரியை சி.எஸ்.ஐ. நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரக்கூடாது

தினத்தந்தி 17/04/08

## முன்னாள் பேராசிரியர்கள், மாணவர்கள் போராட்டம் நடத்த முடிவு

மதுரை,ஏப்.17–

அமெரிக்கன் கல்லூரியை சி.எஸ்.ஐ. நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரக்கூடாது என்பதை வலியுறுத்தி முன்னாள் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

### அமெரிக்கன் கல்லூரி

மதுரை அமெரிக்கன் கல்லூரி 1881–ம் ஆண்டு ஒரு கிறிஸ்தவ கல்வி நிறுவனமாக நிறுவப்பட்டது. 1934–ல் தன்னாட்சி நிறுவனமானது. அனைத்து உரிமைகளையும், சொத்துக்களையும் ஆட்சி மன்ற குழுவிற்கு மாற்றி, சொசைட்டியாக மாற்றப்பட்டது. பிறகு 1949–ல் கல்லூரி தென்னிந்திய திருச்சபையோடு இணைந்தது.

கல்லூரி முதல்வரும், செயலாளருமாக இருப்பவருக்கே கல்லூரியை நிர்வகிப்பது, அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை வழங்கப்பட்டது. கல்லூரியை தற்போதைய மதுரை, ராமநாதபுரம் திருமண்டல பேராயராக உள்ள கிறிஸ்டோபர் ஆசீர், தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர முயற்சிக்கிறார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனை தடுக்கும் வகையில் அமெரிக்கன் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர்கள் அடங்கிய ஒரு போராட்டக்குழு (ஐ.பி.ஏ.சி) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் தலைவராக முன்னாள் பேராசிரியர் வின்பிரட் மற்றும் துணைத்தலைவர்களாக சாலமன் பாப்பையா, வசந்தன் ஆகியோரும், செயலாளராக முன்னாள் மாணவர் பார்த்தசாரதியும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அமெரிக்கன் கல்லூரி சி.எஸ்.ஐ. நிர்வாகத்துக்கு உட்படுத்தும் முயற்சி குறித்த விளக்கக்கூட்டம் மதுரை மக்கள் கண்காணிப்பக அலுவலகத்தில் நேற்று நடந்தது.

### சாலமன் பாப்பையா

கூட்டத்துக்கு பின்னர் நிருபர்களிடம் சாலமன் பாப்பையா கூறியதாவது:– அமெரிக்கன் கல்லூரியில் தற்போது சில விரும்ப தகாத செயல்கள் நடப்பதாக தெரிகிறது. 127 ஆண்டுகள் பாரம்பரியமிக்க இந்த கல்லூரி அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் பொது சொத்து ஆகும். ஆனால் அதிகார வரம்பை மீறி சி.எஸ்.ஐ. பேராயர் கிறிஸ்டோபர் ஆசீர் தனது மருமகனை கல்லூரியின் நிதியாளராகவும், மேலும் அவருக்கு வேண்டிய சிலரை அங்கு பணியில் அமர்த்தி உள்ளதாக தெரிகிறது. பேராயரின் நோக்கத்துக்கு உடன்படாத முதல்வர் சின்னராஜ் ஜோசப் ஜெயக்குமார் அவர் விடுப்பில் இருப்பதாக கூறி அவரது அறை பூட்டப்பட்டுள்ளது. அனைத்துதரப்பு மக்களுக்காக கொடுத்த சொத்தை பேராயரின் சொத்தாக மாற்ற முயற்சிப்பது தடுக்கப்படவேண்டும். கல்லூரிக்கு 3¼ கோடி ரூபாய் கடன் உள்ளதாக கூறி, கல்லூரிக்கு சொந்தமான சில சொத்துக்களை விற்கும் முடிவை கைவிடவேண்டும்.

### துண்டு பிரசுரம்

அரசியல் பின்னணி இல்லை என்றாலும், சி.எஸ்.ஐ. நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் முயற்சியை தடுக்க அனைத்து கட்சியினரின் ஆதரவுகளை திரட்டுவோம். முதல் கட்டமாக மதுரை தல்லாகுளம் மைதானத்தில் வருகிற 19–ந்தேதி காலை 9 மணி முதல் 2.30 மணிவரை விளக்கக்கூட்டம் நடத்துகிறோம். அப்போது துண்டு பிரசுரம் வினியோகம் செய்து ஆதரவு திரட்ட போகிறோம். கல்லூரியை மீட்டு எடுக்கும் முயற்சியில் முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்களின் ஆதரவுகளையும் கேட்போம்.

இவ்வாறு சாலமன் பாப்பையா கூறினார்.